# மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம் (PGIM)
## கொழும்பு பல்கலைக்கழகம்
## இலங்கை

# பிரதிப் பணிப்பாளர் பதவி

மருத்துவ சிறப்புத்தன்மைகளில் சபை சான்றிதழ் அல்லது கலாநிதித்துவம் ஒன்றை பெற்றவர்களிடம் இருந்து மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவன, பிரதிப் பணிப்பாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கல்வி மற்றும் நிர்வாகத் துறைகளில் முந்தைய அனுபவம் அனுகூலமாகக் கருதப்படும். பிரதிப் பணிப்பாளர், மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் ஒரு முழு நேர அதிகாரியாக இருப்பார். பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாகும். விண்ணப்பதாரர்கள் 2024.11.30 ஆம் திகதிக்கு 65 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதோடு 62 வயதுக்கு உட்பட்டிருப்பது விரும்பத்தக்கது.

**நியமனத்திற்கான சம்பளம் மற்றும் ஏனைய நிபந்தனைகள்**

**(U-AC 3 (II)) - ரூபா 79360 – 11x1630 – 97290 p.m.**

❖ தேர்வுசெய்யப்படும் விண்ணப்பதாரருக்கு சம்பளத்திற்கு மேலதிகமாக, கல்விசார் கொடுப்பனவு மற்றும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு வழங்கப்படும்.

உங்களது தொழில்முறை, கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை நிரூபிப்பதற்கு விண்ணப்பத்துடன் உறுதி செய்யப்பட்ட சான்றிதழ்களின் நிழற்பிரதிகளை இணைக்கவும்.

உயர்கல்வி நிறுவனங்கள், அரச திணைக்களங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். இந்தத் தேவையை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தேர்வுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர் ஓய்வுபெற்ற அரச அதிகாரியாயின், பொது நிர்வாக சுற்றுநிருபங்களின் ஏற்பாடுகளுக்கு அமைய பிரதிப் பணிப்பாளர்/ PGIM இன் பதவிக் காலத்தின்போது பதவிக்காக ஒதுக்கப்படும் ஊதியத்திற்கு மேலதிகமாக அவர் ஓய்வூதியத்திற்கு உரிமை பெறமாட்டார்.

தொழில் விபரம் மற்றும் விண்ணப்பம் உட்பட மேலதிக விபரங்களை மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் இணையதளத்தில் (pgim.cmb.ac.lk) இருந்து பெறலாம்.

தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளுடன் முறையாக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை 2024.11.30 அன்று அல்லது அதற்கு முன்னர் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ ஸ்தாபனம் மற்றும் பொது நிர்வாகக் கிளைக்கு (மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம், இல. 160, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை, கொழும்பு 07) கைகளால் கொண்டுவந்து சேர்ப்பது அல்லது saradmin@pgim.cmb.ac.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும். விண்ணப்பிக்கும் பதவி மின்னஞ்சலின் தலைப்பில் அல்லது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.

**பணிப்பாளர்**
**மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம்**
**இல. 160, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை**
**கொழும்பு 07**
**10.11.2024**